முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 788**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

25.11.2021, வியாழக்கிழமை

1. கர்மவினை போக்கவந்த மகா சக்தியே
கந்தவேலன் என் சூட்சும அவதாரமே
தர்மபலம் கொண்டு உலகை மீட்க
தவசியாக வந்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 9ம் நாள், 25.11.2021 வியாழக்கிழமை)
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரமென ஓங்காரக்குடில் படைத்து
வையகத்தில் உள்ள மக்களையெல்லாம் ஞானிகளாக்கி
3. ஆக்கியே கலியுகத்தை ஞானயுகமாக
அற்புதம் பட மாற்றுவேன் என அவதாரம் புரிந்த
அழியாமை பெற்ற அரங்கனே
அண்ணலே உந்தன் கொள்கை இந்த உலகை ஆளும்
4. ஆளுமப்பா உன் தர்மம் ஐயமற (சந்தேகமற) கலியுகத்தை
அற்புதமிக்க ஞானயுகமாக மாற்றி அருள்புரியும்
வகைபட உன் தர்மத்தை
வணங்கி ஏற்று வரும் மக்கள் மூலமாகத்தான்
5. ஆகவே உலகத்தை ஆறுமுகன் யான்
அற்புதம்பட ஞானதர்ம லோகமாக மாற்றி
மகிழவே மக்கள் விரும்புகின்ற வண்ணம்
மனஅமைதி பாதுகாப்பு மிகுந்த பூமியாக்கி
6. ஆக்கியே உலகில் அரங்கன் வழி
ஆற்றல்பட இந்த மாற்றம் புரிவேன்
வரங்களென உன் தொண்டர் படையைக்கொண்டே
வையகத்தல் சில அற்புதங்கள் நிகழ்த்துவேன்
7. நிகழ்த்தவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
நிலைத்தன்மை கொண்ட மாதவசி நீ
வரமென உன்வழி தீட்சை பெற்றவரும்
வணங்கி உன் தர்மத்தை செய்துகொண்டு வருபவரும்

8. வருபவர்களெல்லாம் இந்த கலியில் (கலியுகத்தில்)
வல்லமைமிக்க ஞானிகளாக உருவெடுத்து
தர்மஞான ஆட்சிக்குண்டான தகுதியான பதவியாளர்களாய்
ஆளுமை மாந்தர்களாய் மாறி
9. மாறியே உலகத்தில் அற்புதம் படைப்பர்
மகான் அரங்கன் உன் வழி இந்த மாற்றத்ததை
ஆறுமுகன் யான் மிகைபட செய்து
உலகமெங்கிலும் முருகப்பெருமான் என் தலைமைகீழ் இயங்க அருள்புரிவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

**அம்மை பார்வதி அருந்தவப் புதல்வனே**
**நம்மையும் காத்து நாட்டை ஆள்வான்**
**- ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்.**